RS Polyclinic
OUR EXPERIENCED DOCTORS
Dr M. Rajkumar — Sr Vascular Surgeon — 98410 25996
Dr K. Nanditha Bhuvaneswari — Sr Eye Surgeon — 9444 256784
Dr Sathish Rajkumar — Laparoscopic & Laser Surgeon — 9445 40179.3
Dr Shanthi R — Sr Vascular Surgeon — 9884 65094.5
Dr Salma R — General Physician — 87780 87742
Dr Praveena E — Sr ENT Surgeon — 9944 10044.3

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmail.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தொகுதி - 6 | நாளிதழ் | 4 பக்கங்கள் சென்னை, 28 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 139

25 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சந்தித்த 3 முன்னணி இயக்குநர்கள்: உணர்வுகள்தான் சினிமாவின் உயிர் என கருத்து



சென்னை – 28 நவம்பர், 2026 25 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சந்தித்த 3 முன்னணி இயக்குநர்கள்: உணர்வுகள்தான் சினிமாவின் உயிர் என கருத்து.

2001- ம் ஆண்டு இந்தி சினிமாவில் புதிய மாற்றங்களை ஏற்படுத்திய ' லகான் ', ' தில் சாஹ்தா ஹை ', ' சாந்தினி பார் ' ஆகிய திரைப்படங்களை உருவாக்கிய இயக்குநர்கள் 25 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சந்தித்தனர்.

இந்திய சர்வதேச திரைப்பட விழாவின் 57- வது பதிப்பையொட்டி நடைபெற்ற சிறப்பு கலந்துரையாடலில் இயக்குநர்கள் மதுர் பண்டார்கர், அசுதோஷ் கோவாரிகர், ஃபர்ஹான் அக்தர் ஆகியோர் பங்கேற்றனர்.

திரைப்படங்கள் சமூகத்தின் கண்ணாடியாக இருக்க வேண்டும் என மதுர் பண்டார்கர் தெரிவித்தார். பெண்களின் வாழ்க்கை, சமூகத்தில் பேசப்படாத உண்மைகள் ஆகியவற்றைத் தனது திரைப்படங்களில் வெளிப்படுத்த விரும்புவதாக அவர் குறிப்பிட்டார். செயற்கை நுண்ணறிவு, காட்சி விளைவுகள் திரைப்படத் தயாரிப்பை மேம்படுத்தினாலும், மனித உணர்வுகளை அவற்றால் மாற்ற முடியாது என்றும் அவர் கூறினார்.

ஒவ்வொரு புதிய திரைப்படமும் புதிய விஷயங்களைச் சொல்வதற்கான வாய்ப்பு என அசுதோஷ் கோவாரிகர் தெரிவித்தார். ஒரு திரைப்படத்தை அதன் முதல் வார வசூலை மட்டும் வைத்து மதிப்பிடக் கூடாது என்று அவர் கூறினார். நடிகர்களின் நடிப்பில் வசனங்களை விட இடைவெளிகள், முகபாவனைகள், பிறர் பேசுவதைக் கவனித்துக் கேட்பது ஆகியவை முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.